**அனர்த்த முகாமைத்துவ நிலையம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை

பயன்படுத்துதல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிலையம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக்

கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிலையத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 92(ஆ) பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமான தேய்வு செய்யப்பட்ட எனினும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற கிரயம் ரூபா 1,644 மில்லியன் ஆன சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் பிரத்தியேகமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்ட விசேட பரிந்துரையின் பிரகாரம் கணக்காய்வில் குறிப்பிடப்பட்ட பரிந்துரை தொடர்ந்தும் செல்லுபடியற்றதாக உள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மானியமாகவும் CRIWMP நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கிடைத்த ரூபா 11,501,020 பெறுமதியான பொலிசெக், உயிர் பாதுகாப்பு அங்கி, அலுவலக உபகரணம் மற்றும் கணனிகள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 6,978,100 ஆக இனங்காணப்பட்டமையால் ரூபா 4,522,920 வேறுபாட்டை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் சரியாக இருத்தல் வேண்டும். |
| (ஆ) வளிமண்டலவியல் திணைக்களத்திற்குரிய காணியொன்று 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 1.034.39 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படாமையினால் அப்பெறுமதியால் நடைமுறையல்லாச் சொத்துக்கள் குறைத்துக் | கட்டிடம் அமைந்துள்ள காணியை கையேற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாமையின் காரணமாக கட்டிடத்தின் பெறுமதியும் நிதிக்கூற்றுக்களில் இனங்காணுதல் பிரச்சனைக்குரியதாக இருந்தமையால் எதிர்காலத்தில் அதனை | நிலையான சொத்துக்கள் உரிய பிரகாரம் இனங்கண்டு தீர்த்து வைத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காண்பிக்கப்பட்டிருந்தது. | தீர்த்து வைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | |

**1.5.4 அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உத்தியோகத்தர்களின் தேவை மற்றும் இடைக்கால குழு அங்கீகாரம் இன்றி தனியார் கம்பனியிலிருந்து ரூபா 424,000 கிரயமான கழுத்துப்பட்டி (டை) 200 கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் 2023 ஆம் ஆண்டின் கணக்குக் கூற்றுக்கள் தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | அதிகார பலத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு முதல் வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 256,569 இணை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடலில் தாமதத்திற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரை இனங்காண்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை 2024 மே 03 ஆந் திகதி வரையில் வழங்குமாறு உரிய குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 மற்றும் மீளாய்வாண்டிற்குரிய மின்சாரப் பட்டியல், நீர்ப் பட்டியல் மற்றும் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகளுக்காக ரூபா 24,624,432 தொகை அனர்த்த முகாமைத்துவப் பிரிவிற்கு செலுத்த வேண்டியிருந்தது. | மின்சாரப் பட்டியல், சுகாதார சேவைகள் பட்டியல்களுக்காக அனர்த்த முகாமைத்துவப் பிரிவினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் பயன்பாட்டின் பிரகாரம் சம அளவில் செலவினங்கள் அறவிடப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் போதியளவான கட்டுநிதி விடுவிக்காமையினால் பிரிவுகளுக்கு அறிவித்து தொடர்ச்சியான இருப்பை | கொடுப்பனவுகள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

உறுதிப்படுத்திக் கொள்வதற்கான இயலுமை பெறப்பட்டுள்ளது.

### 1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் | | | |
| i. 38(உ) பிரிவு | மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவிற்காக 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் பதிலளிக்கப்பட வில்லை. | பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் விரைவாக பதிலளிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| i. நிதிப்பிரமாணம் 101 மற்றும் 156 (1) | ஆகக் குறைந்த தகைமை இன்றிய மற்றும் பிழையான தகவல்களுடன் ஆவணங்கள் சமர்ப்பித்து பணிப்பாளர் (குறைத்தல்) பதவிக்கு நியமிக்கப்பட்ட மற்றம் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருடம் தகைமைகாண் காலம் சேவையாற்ற வேண்டியிருந்த போதிலும் ஒரு வருட காலத்தின் பின்னர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 14,163,264 செலுத்தப்பட்டிருந்த போதிலும் | இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு மற்றும் சட்டமாதிபர் திணைக்களத்திலிருந்து ஆலோசனை கோரப்பட்டுள்ளது. சட்டமாஅதிபரின் ஆலோசனையின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட ஆலோசனையின் படி மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிதிப்பிரமானத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| ii. | நிதிப்பிரமாணம் 507 மற்றும் 128(1) மற்றும் 2017 யூன் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களில் ரூபா 444,000 ஆக குறிப்பிடப்பட்ட நூலகப் புத்தகங்கள் மீளாய்வாண்டின் போது பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாதிருந்த துடன் நன்கொடையாகக் கிடைத்த நூலக புத்தகங்களின் பெறுமதியும் சரியாக மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் நூலகத்திற்கு சொந்தமாகக் காணப்பட்ட கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களும் வரடாந்த பொருள் மெய்மையாய்வின் மூலம் பரீட்சித்து புத்தகங்களின் பாதுகாப்புத் தொடர்பாக தொடர்ந்தும் சான்றுறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் விநியோகிக்கப்பட்ட செயற்பாட்டுக் கைநூல் 6.6 ஆம் பந்தி | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு ஆண்டறிக்கை, வழிகாட்டலின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 இன் ஆண்டறிக்கை மீண்டும் திருத்தப்படுகின்றது. | சுற்றறிக்கையின் வழிகாட்டியில் வழிகாட்டல்கள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஈ) | 2013 ஒக்தோபர் 24 ஆந் திகதிய இலக்கம் TA Circular 2013/2014(ii) என்ற பொதுத் திறைசேரி சுற்றறிக்கை | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அனுபவம் இன்றி 2023 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு தொழில்முயற்சியாளர்கள் ஐந்து பேர்களுக்கு அனுசரணை காண்பித்து வெளிநாட்டுப் பயிற்சி, செயலமர்வு, மாநாடுகள் மற்றும் 05 சுற்றுலாக்களுக்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகத்தர்கள் எட்டுப்பேர்களுக்கு இடைக்கால குழு | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம் எதிர்காலத்தில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் மூலம் அனுப்பப்படாத வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற பெயர் முன்மொழிவுகளின் பிரதிகள் அமைச்சர் ஊடாக வெளிநாட்டு | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அங்கீகாரத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு தெரிவு செய்யும் திட்ட முறைமையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்டு ரூபா 486,691 கிரயம் செலவில் பங்குபற்றியிருந்தனர். | வளங்கள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய இலக்கம் 30/94 என்ற அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 5.7.2 ஆம் பந்தி | புலமைப்பரிசில் நலனாளிகள் மற்றும் பயிலுனர்கள் தொடர்பான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் வெளிநாட்டு வழங்கல் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2007 ஆம் ஆண்டு முதல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக அனுப்பப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய அழைப்பு அனுப்பப்படுகின்ற நிறுவனத்தால் விநியோகிக்கப்படுகின்ற நியதிகள் போன்றவற்றை உள்ளடக்கிய தரவு முறைமையொன்றில் முன்னுரிமையாக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2019 யூலை 25 ஆந் திகதிய இலக்கம் SC&PMU/Grant/19 என்ற வெளிநாட்டு வழங்கல் சுற்றறிக்கையின் 3, 4 ஆம் பந்திகள் | 2023 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 08 அமைப்புக்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 54,850,969 பின்பற்றதல் தொடர்பாக இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் வெளிநாட்டு மானியங்கள் மூலம் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டமும் நிலையத்திடம் காணப்படவில்லை. | நிலையத்துக்கு பெறப்பட்ட சகல வெளிநாட்டு மாணியங்களும் வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உரிய திட்ட முறைமை மற்றும் உரிய திட்டத்தின் பிரகாரம் இதன் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11.54 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 44.75 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 33.21 மில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் 8(ஊ) பந்தியின் கீழ் நிலையத்தில் ஒரு பணிக்காக இடர் ஆபத்தைக் குறைப்பதற்காக தயாரிக்கப்பட்ட ஆராய்ச்சி அறிக்கையின் 100 பிரதிகள் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அல்லது திட்டமிடலுக்கோ அல்லது பொதுத்திறைசேரியின் பயன்பாட்டிற்கோ எடுக்கப்படாமையின் காரணமாக அதற்காக செலவிடப்பட்ட ரூபா 4,200,000 தொகை சிக்கனமற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | ரூபா 4,200,000 செலவில் வரைபடம் அச்சிடல் மற்றும் 100 புத்தகங்கள் அச்சிடுவதற்காக ரூபா 1.8 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் தகவல்களை சேகரிப்பதற்காக பல்கலைக்கழக பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்காக நாளொன்றுக்கு ரூபா 500 வீதம் படி செலுத்துதல் என்ற செயற்பாடுகள் ஆகும். அதனால் இந்தத் தொகை சிக்கனமற்ற செலவினம் அடிப்படையாகக் கொள்ள முடியாது. | மேற்கொள்ளப்படுகின்ற செலவினங்கள் ஆக்கபூர்வமானதாக இருத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை தொழில் முகாமைத்துவ சட்டத்தின் திருத்தப்பட்ட 2012 யூலை 05 ஆம் திகதிய இலக்கம் அமப/12/0790/548/004 என்ற அமைச்சரவைப் பத்திரத்தில் இடைக்கால முகாமைத்துவக் குழு ஸ்தாபிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் | சட்ட திருத்த நடவடிக்கைகள் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் தற்போது சட்டமாஅதிபர் திணைக்களத்தின் அவதானிப்புக்களுக்காக அனுப்பப்பட்டுள்ளது. | சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் சட்டத்தின் தேவைகள் திருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | 2005 இன் 13 இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் நிலையத்தின் பிரதான பணியான தேசிய அவசர சந்தர்ப்ப செயற்பாடுகளுக்கான திட்டங்கள் தயாரித்து அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | தேசிய அவரச செயற்பாட்டு திட்டத்தின் வரைவு பூர்த்தி செய்யப்பட்டு வரைவு ஒன்று தயாரித்தல் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மேற்கொள்ளப்பட்ட போதும் பிழைகளை சரிசெய்து மொத்த பிரதிகளை அச்சிடாமையின் காரணமாக அமைச்சரவைக்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | தேசிய அவசர சந்தர்ப்ப செயற்பாட்டு திட்டங்கள் தயாரித்து அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படவேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலையத்தின் வெற்றிடப் பதவிகளின் எண்ணிக்கை 169 ஆக இருந்ததுடன் இந்த வெற்றிடங்களில் அத்தியாவசியமான 05 பதவிகள் பல வருட காலம் முதல் காணப்படுகின்றமையால் நிலையத்தின் செயற்பாடுகளை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் கொண்டு செல்வதற்கு இடையூறாக இருந்தது. | இலக்கம் 21/1596/304/134 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் ஆட்சேர்த்தல் நிறுத்தப்பட்டதன் காரணமாக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளுதல் தாமதமடைந்திருந்தது. | வெற்றிடங்களை நிரப்பி நிலையத்தின் நடவடிக்கைகளை செயற்திறனாக நடாத்திச் செல்லுதல் வேண்டும். |
| (ஈ) | அனர்த்த முகாமைத்துவத்திற்காக தேசிய சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதன் கீழ் ஓய்வு பெற்ற இராணுவ உத்தியோகத்தர் ஒருவர் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் 2020 சனவரி 15 ஆந் திகதிய இலக்க அமப/19/3498/203/008 என்ற அமைச்சரவை தீர்மானத்தில் | 2020 ஆம் ஆண்டு முதல் இதுவரை அவசர முகாமைத்துவ சபை கூடாதிருந்ததுடன் அந்த சபை கூடுவதற்குரிய நடவடிக்கைகள் பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினால் மேற்கொள்ளப்படும். | உரிய அதிகார பலத்துடன் செயற்பாடுகளை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளர் நாயக பதவி நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சரவை தீர்மானத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட அங்கீகாரம் அதன் கீழ் இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. | | |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுகளுக்கு தற்காலிகமாக வழங்கப்பட்ட ரூபா 4,317,955 பெறுமதியான அவசர அனர்த்த சிகிச்சையளிக்கும் 153 உபகரணங்கள் அனர்த்த நிலைமைகளின் போது பயன்படுத்தக்கூடியுமான வகையில் மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் அவர்களின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பொருத்தமான நிறுவனத்திற்கு தேவையான உபகரணங்கள் தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. அந்த உபகரணங்கள் செயல்பாட்டு நிலையில் காணப்படுகின்றதா எனவும் மற்றும் சரியாக உரிய நிலையங்கள் வைக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பாகவும் தொடர்ச்சியாக ஆராய்ந்து பார்த்தல், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு ஊடாக பிரதான அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகின்றது. | தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ள உபகரணங்கள் இணங்கி பிரகாரம் பெற்றுக் கொள்வதற்கு அல்லது தொடர்ச்சியாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட உபகரணங்கள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வின் மூலம் உறுதிப்படுத்தலும் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | நிலையம் 2011 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 3,247,761,559 செலவில் இடர் அனர்த்தத்தை குறைக்கும் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த போதும் வெள்ளம், மண்சரிவு, அதிக காற்று நிலைமையின் காரணமாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் 13 வருட காலத்தில் கிடைக்கப்பெற்ற அனர்த்தங்களைக் குறைக்கும் நிதியேற்பாடுகளில் மாத்திரம் பாதிப்புக்கு உட்பட்ட நபர்களின் எண்ணிக்கை குறைக்க முடியாதிருந்தமையும் இதற்காக தாக்கமளித்த சமூக, பொருளாதார மற்றும் நபர்கள் இணைக்கும் விடயங்கள் | அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்ப்பு எட்டப்பட்ட பெறுபேறுகள் அடையப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பாதிப்புக்குட்பட்ட நபர்களின் எண்ணிக்கை 235,389 ஆனமையால் அதிலிருந்து கிடைக்கப்பெற்ற விளைவுகள் சொற்பமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | அனேகமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |

### 3.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் 8(ஈ) மற்றும் (உ) இன் கீழ் அனர்த்தத்தினை தடுக்கும் செயற்திட்டத்தினை அமுல்படுத்துதல் மற்றும் மதிப்பீட்டு நிலையத்தின் பொறுப்பாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 162 மில்லியன் நிதியேற்பாடுகளில் அனர்த்தத்தைக் குறைக்கும் 88 செயற்திட்டங்களை அமுல்டுத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் அதில் ரூபா 44 மில்லியன் ஆன 29 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ரூபா 43,657,879 ஆன அனர்த்தத்தைக் குறைக்கும் செயற்திட்டத்தில் 29 முன்மொழிவுகள் வருடம் முழுவதும் காணப்பட்ட அதிக மழை நிலைமையினால் , ஏனைய செயற்திட்டங்களை அமுல்படுத்துதலில் காணப்பட்ட அனர்த்த நிலைமை அதிகரித்தமை, ஏனைய நிறுவனங்களின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கி செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் மற்றும் புதிய மதிப்பீட்டை தயாரிக்கும் போது வழங்கப்பட்டிருந்த மதிப்பீட்டு நிதியேற்பாடு போதியளவில் இல்லாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் இரத்து செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டங்களை அமுல்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்து கொள்ள வேண்டும். |

### 3.5 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆபத்தினைக் குறைக்கும் பிரிவினால் 06 மாவட்டங்களில் 233.9 மில்லியன் செலவில் அமுல்படுத்தப்பட்ட 08 நிர்மாண செயற்திட்டங்கள் | அமுல்படுத்தப்பட்ட செயல்திட்டங்கள் குறைவாக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் செயற்திட்டங்களின் பயன்பாடு தொடர்பான உறுதிப்படுத்தல் | அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| தோல்வியடைந்து குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | மற்றும் வேலை பூர்த்தி செய்யும் அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | பெறுபேறுகளை அடைந்து கொள்ளல் வேண்டும். |

**3.6 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 39.17 மில்லியல் ஆன மதுரங்குழி கடையாமோட்டையில் ஒருவரின் வீட்டுக்கு அருகில் வடிகான் ஒன்றை அமைத்தல் தொடர்பான செயற்திட்டத்திற்குரிய பெறுகையின் போது சீடா தரம் C-5 மற்றும் C-4 பதிவுடன் ஒப்பந்தகாரரின் கேள்வி கோர வேண்டியிருந்த போதிலும் C-5 அல்லது C-6 வுடன் ஒப்பந்தகாரரின் கேள்வி கோரப்பட்டிருந்தது. மேலும் உரிய ஆய்வு இன்றி மிகை மதிப்பீடு தயாரித்தமையால் வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 15.7 மில்லியன் தொகை குறைவாக பயன்படுத்தப்பட்டு மீண்டும் கையேற்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட செயலகத்திற்கு அனர்த்தங்களைக் குறைக்கும் வழிகாட்டியின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை மற்றும் அதற்கு உரியதாக விநியோகிக்கப்பட்ட மேலதிகத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் செயற்திட்ட மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.4 பந்திக்கு இணங்காத வகையில் ரூபா 19.76 மில்லியன் கிரயமான சிலாபம் மாவட்டத்தில் மைக்குளம் மற்றும் சவரான கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வெள்ளநீர் ஆபத்தை குறைக்கும் செயற்திட்டத்திற்கா தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமித்த மூன்று அங்கத்தவர்களும் புத்தளம் மாவட்ட செயலகத்திலிருந்து | பதிலளிக்கப்படவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் செயற்திட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நியமிக்கப்பட்டிருந்தனர். மேலும் இந்த செயற்திட்டத்தின் கீழ் வடிகான், திமிலஎல வாய்கால் மற்றும் அவரங்குழிய வாய்க்கால் ஊடாக அணையினை நிர்மாணித்ததன் காரணமாக செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படாமையினால் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 1.4 மில்லியன் தொகையின் பயனற்ற செலவீனத்திற்கு உட்பட்டிருந்தது. | | |

## 3.7 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கிரயம் ரூபா 21.66 மில்லியன் ஆன நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை கங்காரக்கொல்ல கிராமத்தில் கல் புரண்டமை மற்றும் மண் சரிவு ஆபத்தைக் குறைக்கும் செயற்திட்டம் ஒன்று ஒரு கேள்வியின் அடிப்படையில் கிரயம் ரூபா 18.47 மில்லியன் ஆன கண்டி மாவட்டத்தின் அக்குரணை வெள்ளநீர் அபாய நிலைமையைக் குறைக்கும் செயற்திட்டம் தோல்வியடைந்த ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் வழங்கப்பட்ட ரூபா 904,720 செயலாற்றல் பிணை காப்புறுதியின் சரியான தன்மை வங்கியிலிருந்து உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பொறியிலாளர் திட்டம் குறித்துரைத்த படிவத்தில் தயாரிக்கப்படாதிருந்ததுடன் பட்டய சிவில் பொறியியலாளர் உறுதிப்படுத்தவும் இல்லை. | இது தொடர்பாக நுவரெலியா மாவட்ட செயலாளரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது செயற்திட்டத்திற்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தமையும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகின் உதவிப் பணிப்பாளர் அதன் அங்கத்தவராகவும் மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட திட்டம் மற்றும் ஆலோசனையின் பிரகாரம் உரிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் மிகுதி செயற்திட்டங்களின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்த நிர்வாகம் சரியான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | களுத்துறை மாவட்டத்தின் மெனிக்கொடஎல மறுசீரமைப்புக் கட்டம் II செயற்திட்டத்தின் நிதியேற்பாடு செய்யப்பட்ட தொகையின் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்த போது ஒப்பந்தகாரரான விவசாய அமைப்பிற்கு ரூபா 2,372,032 போலியான பட்டியல் சமர்ப்பித்தமை தொடர்பாக அந்த அமைப்பிற்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பட்டியல்கள் நிராகரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்படவில்லை. இது தொடர்பாக களுத்துறை மாவட்ட செயலாளருக்கு பாதுகாப்பு அமைச்சின் மூலம் அறிவிக்கப்பட்டதுடன் மாவட்ட செயலகத்துக்குரிய பிரதேச செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்த நிர்வாகம் சரியான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,800,000 ஆன மெனிக்கொட எல மறுசீரமைப்புக் கட்டம் II செயற்திட்டத்தின் பல சந்தர்ப்பங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் உத்தியோகத்தர்கள் போன்று நிலையத்தின் உத்தியோகத்தர்களும் தவறுகள் மற்றும் கடமைகளில் கவணமின்மை, தாமத வழுக்கள் மற்றும் கவனமின்மையினால் இந்த செயற்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடையமுடியாதிருந்ததுடன் அதில் நலன்கள் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு முடியாமல் கைவிடப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் வேலை நடவடிக்கைகள் தொடர்பாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகில் மற்றும் மாவட்ட செயலகத்தால் அவ்வப்போது பரீட்சிக்கப்பட்ட போதிலும் செயற்திட்டத்தின் வேலை நடவடிக்கைகளை உரிய பிரகாரம் மேற்கொள்ளாதிருந்தமை யை உறுதிப்படுத்துமாறு அறிவிக்கப்படவில்லை. | ஒப்பந்த நிர்வாகம் சரியான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | கிரயம் ரூபா 18.91 மில்லியன் செலவில் கங்காரகொல்ல கிராமத்தில் கல் புரள்வு ஆபத்தைக் குறைக்கும் செயற்திட்டத்தின் நிர்மாணங்களின் பௌதீக பரிசோதனையின் போது கிரயம் ரூபா 12.3 மில்லியன் ஆன வடிகான் முழுமையாக கழன்று செல்லும் ஆபத்துக் காணப்பட்டமை, | சுட்டிக்காட்டப்பட்டுள்ள இடங்களில் அதிக வளைவுடனுமான நிலையம் இடமாக இருந்தமையால் அந்தப் பகுதியை மண் நிரப்பி பாதுகாத்தல் வசதியீனமாக இருந்ததாக பொறியியலாளர் ஆலோசனையின் அடிப்படையில் | ஒப்பந்த நிர்வாகம் சரியான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வடிகான்களில் கம்பி துருப்பிடித்தலுக்கு உட்பட்டமை, வயல்களில் நீர் மட்டத்தின் உயரம் 420 மில்லிலீற்றர் குறைவாக நிர்மாணித்தல் மற்றும் கிரயம் ரூபா 5.9 மில்லியன் ஆன இரண்டாவது நிறுத்தி வைத்தல் வடிகானின் வளைவு இருபக்கத்திலும் உள்ள சுவருக்கு மண் நிரப்பி அடைக்கப்படாமை, பக்க சுவரின் தடிப்பம் மில்லிமீற்றர் 10 இற்கு குறைவாக நிர்மாணிக்கப்பட்டமை மற்றும் மூன்றாவது இடர் வலயத்தில் வடிகாண் 02 மீற்றர் அகலத்தில் காணப்படாமையின் காரணமாக இந்த செயற்திட்டம் தோல்வியடைந்திருந்தது. | மேற்கொள்ளப்பட்டிருந்தைத அறிவிப்பதுடன் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | மாத்தறை வெலிகம வீடொன்றிற்கு அருகில் அதிக மழையுடன் மண்மேடு உடைந்து விழுவதை தடுப்பதற்காக தடுக்கும் சுவர் ஒன்றை நிர்மாணிப்பதற்கு நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான அனர்த்த ஆபத்து நிலைமையின் அடிப்படையாகக் கொள்ளாமல் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இடைநடுவில் நிறுத்தப்பட்டமையால் ரூபா 464,645 சிக்கனமற்ற செலவினம் செய்யப்பட்டிருந்தது. | பொதுத்திறைசேரி மூலம் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டி சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் தாக்கத்தினை குறைக்கும் நிலைமையில் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்திட்டம் கைவிடப்பட்டுள்ளது. | ஆபத்துக்களை குறைக்கும் செயற்திட்டம் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் அடைந்துகொள்ளப் படல் வேண்டும். |
| (ஊ) | கண்டி மாவட்டத்தில் மினிப்பில் பிரதேச செயலகத்தில் பொரல்லுபத்த முதியோர் இல்ல காணியில் ஆபத்துடனான கல்லை அகற்றுல் மற்றும் பக்கச்சுவர்களை அகற்றுவதற்காக ரூபா 2.2 | இது தொடர்பாக கண்டி மாவட்ட செயலாளரிடம் விசாரணை செய்யப்பட்டுள்ளதுடன் பதில் கிடைத்த பின்னர் அதன் பிரகாரம் அறிவிக்கப்படும். ஒப்பந்த நிர்வாகம் உரிய பிரகாரம் | ஒப்பந்த நிர்வாகம் சரியான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மில்லியன் செலுத்தப்பட்ட போதிலும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் தேசிய கட்டிட ஆராய்சி நிறுவனத்தின் அறிக்கை பெற்றுக்கொள்ளாமல் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆபத்தான கல்லை அகற்றும் போது மேலும் கல் மேலிருந்து கீழே உருண்டமையின் காரணமாக மொத்த நிதியேற்பாட்டிற்குட்பட்ட தொகையும் கல்லை அகற்றுவதற்கு மாத்திரம் செலுத்தி பக்க சுவரை அகற்றுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தை முழுமையாக அமுல்படுத்தாமையினால் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்படல் வேண்டும். | |

## 3.8 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் பதவி மற்றும் பணிப்பாளர் (செயற்பாடுகள்) பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட தகைகைகள் மற்றும் அனுபவங்களுடன் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படாமை இராணுவ உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் (செயற்பாடுகள்) பதவி ஆரம்பம் முதல் முப்படை உத்தியோகத்தருக்கு நியமித்து பேணிச் செல்லப்படுவதுடன் அதற்காக அவசர முகாமைத்துவத்திற்காக தேசிய சபையினதும் இடைக்கால முகாமைத்துவக் குழுவினதும் அங்கீகாரம் காணப்படுகின்றது. | ஆட்சேர்த்தல் நடைமுறையின் தேவைகளை திருத்துதல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டிறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையத்தால் 2022 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2024 மார்ச் 15 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 இன் ஆண்டறிக்கை 2024 மார்ச் 21 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக கையளிக்கப்பட்டுள்ளது. | ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 முகாமைத்துவ தகவல் முறைமையின் வினைத்திறன் தன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 9,011,500 செலவில் அவசர முகாமைத்துவம் தொடர்பான தரவு தொகுதியொன்றை அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதை பயன்பாட்டிற்கு எடுக்காமல் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | தரவு முறைமை குறைவாக பயன்படுத்தப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளதுடன் தரவின் அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுத்தல் ஏனைய நிறுவனங்கள் இந்த தரவிற்காக விண்ணப்பித்திருந்ததுடன் இந்த நிலையத்திலும் இந்த தரவுகள் பயன்படுத்தப்படுகின்றது. | தரவு தொகுதியொன்றை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2005 இன் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள தேசிய பணிப்பொறுப்புக்களை ஆக்கபூர்வமாக ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் மதிப்பீட்டிற்கு தேவையான அறிவுறுத்தல் மற்றும் திறன்மட்டத்தில் ஈடுகொடுக்கின்ற வகையில் உள்ளகக் கணக்காய்வை விரிவுபடுத்த வேண்டியிருந்த போதிலும் நிலையத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்காக கணக்காய்வு உத்தியோகத்தர்கள் | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | உள்ளகக் கணக்காய்விற்காக உத்தியோகத்தர்களை சேர்த்து வலுப்படுத்தி உள்ளகக் கட்டுப்பாடொன்றை பேணிச் செல்லல் வேண்டும். |

இருவர் மாத்திரம் நியமிக்கப்பட்டமையால் நிலையத்தின் செயற்பாடுகளை போதியளவான பிரகாரம் வெளிப்படுத்தும் வகையில் விரவான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போதும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.